**Previous Examination date – 15.06.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 38 of 2022**

**Deposition of Witness P.W.7**

| | |
|---|---|
| **Name : மணி** | **Father/Husband's Name : சுகுமாறன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.06.2026.**

**A1, A2 present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கீரனூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு.குணசேகரன் அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திரு.குணசேகரன் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். திரு.குணசேகரன் காவல்நிலையத்தில் கடந்த 16.09.2021ம் தேதி காலை 7.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மாரிமுத்து என்பவரை விசாரித்து கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே நிலையம் வந்து நிலைய காவல்நிலைய கு.எண்.343/2021, பிரிவுகள் 294(b),323,506(2) இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4**ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவயிடம் சென்று சாட்சிகள் பழனியம்மாள், லட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் மதுரை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை

பெற்று பிணையில் சென்றதால் கைது செய்யப்படவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட மாரிமுத்து என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் பாலசுப்பிரமணி என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். **விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **பெரியசாமி என்பவரின் விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சி 1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச் சான்றளித்துள்ளார். பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b),323,506(2) இ.த.சவின் கீழ் 01.11.2021ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.18 17:57:02 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.